செவ்வாய்க்கிழமை, 21 செப்டம்பர் 2021

# போரூர் ராமச்சந்திரா: மருத்துவ நிபுணர்களுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது



போரூர் ராமச்சந்திரா உயர் கல்வி ஆராய்ச்சி நிறுவனத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற நிறுவன தின விழாவில் எம்பிபிஎஸ் படிப்பில் சிறப்பிடம் பெற்ற டாக்டர் அரவிந்த் ராதாகிருஷ்ணனுக்கு தங்கப்பதக்கத்தை வழங்கும் கல்வி நிறுவனத்தின் வேந்தர் வி.ஆர்.வெங்கடாசலம்.

**சென்னை, செப். 20:** போரூர் ஸ்ரீ ராமச்சந்திரா உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் நிறுவன தின விழா திங்கள்கிழமை நடைபெற்றது. கல்வி நிறுவனத்தின் வேந்தர் வி.ஆர்.வெங்கடாசலம் தலைமையில் நடைபெற்ற அந்நிகழ்வில், மருத்துவத் துறையில் அளப்பரிய பங்களிப்பை வழங்கிய மருத்துவ நிபுணர்களுக்கு விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

முதுநிலை மருத்துவர் டாக்டர் டி.கே.பார்த்தசாரதி, இதய சிகிச்சை நிபுணர் டாக்டர் ஜெ.எஸ்.என். மூர்த்தி, மருத்துவக் கண்காணிப்பாளர் டாக்டர் எஸ்.மல்லிகேசன் ஆகியோருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது.

டாக்டர் கே.வி.சோமசுந்தரம், டாக்டர் எஸ்.ஆனந்தன், டாக்டர் வி.சுவாமிநாதன், டாக்டர் டி.ஆர். முரளிதரன் உள்ளிட்டோருக்கும் சிறப்பு விருதுகள் வழங்கப்பட்டன.

எம்பிபிஎஸ் படிப்பில் சிறப்பிடம் பெற்றமைக்காக மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலர் ஜெ. ராதாகிருஷ்ணனின் மகன் டாக்டர் அரவிந்த் ராதாகிருஷ்ணனுக்கு மூன்று தங்கப் பதக்கங்கள் வழங்கப்பட்டன. அதைத் தவிர மேலும் பலருக்கு தங்கப் பதக்கங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் பேசிய ராமச்சந்திரா உயர் கல்வி நிறுவனத்தின் துணை வேந்தர் டாக்டர் பி.வி.வி ஜயராகவன், சர்வதேசத் தரத்தில் வணிகக் கல்வி நிறுவனம் ஒன்றை மேம்படுத்துவதற்கும், பொறியியல் மற்றும் தொழில்நுட்பத் துறையை நவீனப்படுத்துவதற்கும் முக்கியத்துவம் அளித்து வருவதாகக் கூறினார்.

இந்நிகழ்ச்சியில், கல்வி நிறுவனத்தின் இணை வேந்தர் செங்குட்டுவன், மருத்துவப் பேராசிரியர்கள், நிர்வாகிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.